1982 செப்டம்பர் 10]

சென்னை—கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் கும்மிடிப்பூண்டிக்கு அருகில் கட்டப்பட்டுள்ள பாலம்.

*வினா எண் 49—திரு. ம. எஸ். மாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை—கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் கும்மிடிப்பூண்டி அருகில் புதியதாகக் கட்டப்பட்ட பாலம் பழுதடைந்துள்ளதால் பழைய பாலத்திலேயே வாகனங்கள் செல்கிறதா?

(ஆ) ஆம் எனில் புதிய பாலத்தை சீரமைக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு ; (அ) ஆம்.

(ஆ) புதிதாகக் கட்டப்பட்ட பாலம் பழுதடைந்துவிட்டதால், அந்தப் பாலத்திற்கருகில் வேறு இடத்தில் புதிய பாலம் கட்டுவதற்காக ரூ. 31,83.500/ மதிப்பில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(முற்பகல் 9.30)

திரு எம். எஸ். மாணிக்கம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய பாலம் எந்த ஆண்டு கட்டப்பட்டது அதைக் கட்டியது யார்? எதனால் அந்தப் பாலம் பழுதடைந்தது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; தலைவர் அவர்களே. சுடந்த 1972லே கட்டப்பட்டது அது சரியாக கட்டப்படவில்லை என்ற காரணத்தினால் பழுதடைந்திருக்கிறது.

திரு எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972-லே கட்டப்பட்ட பாலம் பழுதடைந்து 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பாலத்திலே இன்றும் பாதை சென்று கொண்டிருக்கின்ற காரணத்தினால், இப்படிப்பட்ட குறைபாடுகள் வராமல் இருப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, தவறு செய்கிறவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை நகரில் வீடு கட்டும் பிளான் அனுமதிக்கப்படுவதற்கான புதிய திட்டம்.

வினா எண் 50—திரு. பெ. சு. திருவேங்கடம் ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் வீடு கட்டும் பிளான் அனுமதி

கோரும் நபர்கள் ஐந்து மரங்களை நட்டு சான்று காட்டினால் தான் பிளான் அனுமதிக்கப்படும் என்ற திட்டத்தை செயல் படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) எப்பொழுது முதல் அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: (அ), (ஆ) மற்றும் (இ) இது குறித்த செயல்திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை ஆனால், இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை செயல்படுத்த மாநகராட்சி ஆய்வு செய்து வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த மாநகராட்சி ஆய்ந்து கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். பிளான் கொண்டு வருபவர்கள் மரம் நடுவதற்கு அவர்களுக்கு சொந்தமான இடத்திலே மரத்தை நட வேண்டுமா? அல்லது எங்கே நடுவது என்பதை விளக்கினால், உறுப்பினர்கள் துணைக் கேள்வி கேட்பதற்கு வசதியாக இருக்கும். இதை விளக்குமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இதெல்லாம் முடிந்த பின் விளக்கமாக பதில் சொல்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பை அரசாங்கத்திற்கு மாநகராட்சி அனுப்பியிருக்க வேண்டும். ஒருவர் கட்டிடம் கட்டுவதற்கான பிளானைக் அனுப்புகிறார். அவர் தன் சொந்த இடத்திலே மரங்களை நட வேண்டுமா? அல்லது அந்த மரங்களை எங்கே நடுவது என்பதைச் சொல்ல வேண்டும். விடையில் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்று சொல்வதால் அமைச்சர் அவர்கள் இதை மேலும் விளக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, எங்கே அவர்கள் மரத்தை நடவேண்டுமென்று நினைக்கிறார் களோ, அந்த இடத்தில் நட வேண்டும். பக்கத்து வீட்டில் அல்ல.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள எரிவாயு உற்பத்தி செய்யும் சாதனம்

*வினா எண் 51—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;—

(அ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மனையில் உள்ள 10 லட்சம் ரூபாய் மதிப்புள்ள எரிவாயு உற்பத்தி செய்யும் சாதனம் செயல்படுகிறதா?

(ஆ) செயல்படவில்லை என்றால் எவ்வளவு காலம் செயல்படவில்லை?